# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 04.03.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் 35வது சூராவின் 44, 45 வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள்: பூமியில் அவர்கள் பெருமையடித்தனர். மேலும் தீய சூழ்ச்சிகள் செய்தனர். ஆனால், தீய சூழ்ச்சி, அதனைச் செய்பவர்களையே சூழ்ந்து கொள்கிறது. (அழிந்து போன) முன் சென்றோரின் வழியினைத் தவிர வேறொன்றையா அவர்கள் எதிர்பார்க்கின்றனர்? ஆனால் அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த மாற்றத்தையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர். மேலும் அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த வேற்றுமையையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர்.**

**அவர்கள் பூமியில் பயணம் செய்து, அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறு (தீயதாக) ஆயிற்று என்பதனை அவர்கள் பார்த்ததில்லையா? அவர்கள் இவர்களை விட வலிமை மிக்கவர்களாக இருந்தனர். வானங்களிலோ பூமியிலோ உள்ள எதனாலும் அல்லாஹ்வின் திட்டங்களை செயலிழக்கச் செய்ய முடியாது. நிச்சயமாக அவன் நன்கு அறிபவனும் பேராற்றல் பெற்றவனும் ஆவான். (35:44,45)**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்கள் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்கள் தான் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். ஏனென்றால், இறைவனின் உதவிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் எப்போதும் இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். இறைவன் அவர்களுடன் நடந்து கொள்கின்ற இந்த முறை நமது ஈமானை உறுதிப்படுத்துகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் புறமிருந்து பெற்று முன்னறிவித்தவைகள் யாவும் அவர்களின் மரணத்திற்குப் பின்னர் இன்னும் நிறைவேறி வருவதைப் பார்க்கிறோம்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்ட நேசத்தின் காரணமாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் பணிகளை தொடர்ந்து செய்வதற்காக இறைவன் அவர்களுக்கு நபித்துவ அந்தஸ்தை வழங்கினான். ஆனால், புதிய ஷரீஅத்தை உடைய நுபுவ்வத் அல்ல. இது நிழல் வடிவ நுபுவ்வத் ஆகும். இது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு பதவியின் மிஃராஜ் (அதாவது உச்ச நிலை) ஆகும். இந்த அந்தஸ்தை இறைவன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே வழங்கியுள்ளான். அதாவது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவரும், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது கொண்ட ஒப்பற்ற நேசத்தைக் கொண்டவராகவும் இருந்த காரணத்தால் நபித்துவ பதவியைப் பெற்றார்கள்.

ஆனால், கவலைக்குரிய விஷயமாக பிற இஸ்லாமிய அமைப்புகளின் ஆலிம்கள் இந்த நுபுவ்வத்திற்கு தவறான விளக்கம் கொடுப்பதால் அந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக எங்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் எப்போது சந்தர்ப்பம் வாய்த்தாலும் எதிர்ப்புக்குரல் எழுப்புவது மட்டுமின்றி முடிந்த அளவிற்கு துன்பம் தர முயற்சி செய்கிறார்கள். சில நேரம் இந்த எதிர்ப்பில் எல்லா எல்லைகளையும் மீறி விடுகின்றனர். பொதுவாக ஜமாஅத்துகள் வளரும் போது, அது பரவும் போது அதன் வளர்ச்சியைக் கண்டு எதிரிகள் வெளிப்படையாக எதிர்த்து, தமது சக்திகளைப் பயன்படுத்தியும், தாம், யாரை எல்லாம் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் என்று நம்புகின்றனரோ அவைகளின் பக்கபலத்தோடு அந்த ஜமாஅத்தின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்வர். சில நேரம் ஈமானில் பலவீனம் உடையவர்களையும், குறைந்த

மார்க்க அறிவுடையவர்களையும், இளைஞர்களையும், உள்ளுக்குள்ளேயே மிகவும் சூழ்ச்சிகரமாக தமது வலையில் சிக்க வைத்து அவர்களை சத்தியத்திலிருந்து விலக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் தமது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தாம் யார்? தாம் என்னவாக திகழ வேண்டும்; ஏன் திகழ வேண்டும்? என்று ஓர் அஹ்மதி நன்கு தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் இவ்வாறான மறைவான எதிரிகளுக்கு தக்க பதில் கொடுக்க முடியும்.

இரண்டாவதாக, தாம் கொண்டிருக்கும் ஈமானை பாதுகாப்பதற்கு இறைவனிடம் உதவி கேட்டு துஆ செய்ய வேண்டும். ஏனெனில் இறையருள் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. இறைவன் நமக்கு ஈமானை உறுதிப்படுத்தவும் எல்லா வித கோணல்களிலிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கும் துஆவைக் கற்றுத் தந்துள்ளான்.

**எங்கள் இறைவா! எங்களுக்கு நேர்வழியை வழங்கிய பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக! உன் புறமிருந்து கருணையை வழங்குவாயாக! நிச்சயமாக நீ மிகப்பெரிய கொடையாளனாவான். (3:9)**

எனவே இறைவனின் கருணையாலேயே ஈமான் பாதுகாப்பு பெறுகிறது. எனவே, ஒரு பணிவுள்ள அடியார் எப்போதும் இறைவனின் அருளையே வேண்டிக் கொண்டிருப்பார்; வேண்டிக் கொண்டிருக்கவும் வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று மக்களிடம் கூறாமல் இருந்தால் அதனால் என்ன தவறு விளைந்து விடப்போகிறது? என்று கேட்டு சிலர் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலேயே இதுபோன்ற கேள்விகள் எழுந்தன. இவ்வாறு நாம் செய்வதால் எதிர்ப்பு சற்று குறைந்து விடும். எனவே 'நபி' என்ற சொல்லை நாம் பயன்படுத்தாவிட்டாலும் அதில் எந்த குற்றமும் இல்லை என்று அப்போதே கூறினர். **அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"இறைவன் சம்பந்தப்பட்ட கருத்துக்களைக் கூறுவதற்கு அஞ்சக் கூடாது."

அதாவது இறைவன் ஒரு விஷயத்தைக் கூறி, அதை நாம் எடுத்துச் சொல்வதற்கு பயப்படக் கூடாது.

"எவ்வித அச்சம் கொள்வதும் சத்தியவான்களின் முறையல்ல. கண்ணியமிக்க சஹாபாக்களின் செயல்முறையைப் பாருங்கள். அவர்கள் அரசவைகளுக்கே சென்று தமது கொள்கை அனைத்தையும் மிகவும் தெளிவுற எடுத்துச் சொல்லி விட்டார்கள். சத்தியத்தை வெளிப்படுத்த சிறிதும் தயங்கவில்லை." எனவே தான் அவர்கள், **குறை கூறுபவர்களின் பழிப்புரைக்கு அஞ்சமாட்டார்கள். (5:56)** என்ற வசனத்தை உண்மைப்படுத்துபவர்களாகத் திகழ்ந்தார்கள்.

**பிறகு கூறுகின்றார்கள்:**

நாம் நபி மற்றும் ரஸூல் ஆவோம் என்பது நமது கொள்கையாகும். எண்ணிக்கையாலும், தரத்தாலும் பிறரை விட அதிகமாக இறைவன் ஒருவருடன் உரையாடினால், அதில் அதிகமான முன்னறிவிப்புகளும் அடங்கியிருப்பின் அவரை நபி என்று கூறுவார்கள். இந்தக் கோட்பாடு நமக்கு பொருந்துகிறது. எனவே நாம் நபி ஆவோம். ஆனால் இந்த நபித்துவம் புதியதொரு ஷரீஅத்தையுடையது அல்ல. இது இறை வேதத்தை ரத்து செய்யும் ஒன்றல்ல. அவ்வாறு இருக்கும் என்றால் அந்த வாதத்தை நாம் குஃப்ர் என்று கருதுகிறோம். இவ்வாறு நாம் நபி இல்லை என்றால் பின்னர் பிற இல்ஹாம் பெறுகின்றவர்களை விட்டு நம்மை பிரித்தறிய வேறு என்ன சொல் இருக்கிறது?

அதாவது இல்ஹாம் பலருக்கு இறங்குகிறது. அதிகமாக யாருக்கு இல்ஹாம் இறங்குகிறதோ, அதிகமாக யாருடன் இறைவன் உரையாடுகின்றானோ அவர் நபி ஆவார்.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மிகவும் வெளிப்படையான மிகத் தெளிவான வாதமாகும். இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு முற்றிலும் பொருத்தமானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபியாவார்கள். எனக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கும் இடையே எந்த நபியும் இல்லை என்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டால், அவர்கள் நபியாவார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறகு எதிர்ப்புகளைப் பொருத்தவரை இறை இயக்கங்களுக்கு எப்போதும் எதிர்ப்பு இருந்து வந்துள்ளது. எதிர்ப்பு இருந்து வரத்தான் செய்யும். இதுவே இறை ஜமாஅத்துகளுக்கான அடையாளமாகும். பெரிய பெரிய வன்முறை ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களின் கூட்டத்தினர் எதிர்த்து நிற்பார்கள். ஆனால், இறைவனால் நிறுவப்பட்ட ஜமாஅத் வளர்ந்து கொண்டே செல்லும். இறுதியில் இந்த எல்லா எதிரிக் கூட்டங்களும் அழிந்து, எல்லா தீய சக்திகளும் தமது மரணத்தை தாமே தேடிக் கொள்ளும். அப்போது இறைவனின் வல்லமை வெற்றி பெறும்.

நானும் எனது ரஸூலும் தான் வெற்றி அடைவோம் என்பது இறைவனின் தீர்மானமாகும். ஆணவம் கொண்ட எல்லாரும், இறைவனுக்கும் அவனது தூதருக்கும் எதிராக திட்டங்கள் தீட்டுபவர்களும் தமது சூழ்ச்சியின் வலையில் தாமே மாட்டிக் கொள்வர். தமது கூட்டத்தின் பலமும், தமக்குப் பக்கபலமாக உள்ள, உலக எஜமானர்களின் உறுதியான கூரைப் பாதுகாப்பும், நபி மற்றும் நபியின் ஜமாஅத்திற்கு எதிராக தீட்டுகின்ற திட்டத்தில் தமக்கு வெற்றி கிடைக்கும் என்று எதிரிகள் மனப்பால் குடிக்கின்றனர். இறுதி வெற்றியானது நிச்சயமாக இறைவனைச் சார்ந்திருக்கும் ஜமாஅத்திற்கே கிடைக்கிறது. சூழ்ச்சிகளையும், பொய்யான திட்டங்கள் வகுப்பதிலும் எவ்வளவுதான் எதிரிகள் புத்திக் கூர்மையுடன் செயல்பட்டாலும் இறைநியதியை ஒருபோதும் அவர்களால் எதிர்க்க முடியாது. இறைவன் ஈமான் கொண்டவர்களுக்கு இவ்வாறு ஆறுதல் அளிக்கிறான். இது இறைவனின் அடிப்படை விதியும், பொதுவான செயல்முறையுமாகும்.

**இறைவன் கூறுகிறான்:**

**தீய சூழ்ச்சியானது அதனைச் செய்பவர்களையே சூழ்ந்து கொள்கிறது.**

அதாவது, அவர்களே இதன் பிடியில் மாட்டிக் கொள்கின்றனர். இறைவனின் பிற சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தியாகங்களுக்கான காலமும் வருகிறது. ஆனால் இறுதி வெற்றி இறைவனைச் சார்ந்தவர்களுக்கே கிடைக்கிறது. நபி மற்றும் அவரது ஜமாஅத்திற்கே இறுதியில் வெற்றி கிடைக்கிறது. இறைவனின் எதிரிகள் நிச்சயமாக தண்டனைக்கு ஆளாகின்றனர். இது இறைவனின் நடைமுறையாகும். இறைவனின் நடைமுறை ஒருபோதும் மாற்றமடைவதில்லை. இறைவனின் இந்த மாறாத நடைமுறை முந்தைய காலத்தின் எதிரிகளுக்கும் அவர்களது தீய முடிவையும் காட்டியது. இன்றும் எதிரிகளுக்கு தீய முடிவைக் காட்டி வருகிறது. மேலும் காட்டவும் செய்யும். இதற்கான பெரிய அடையாளத்தை இறைவன் சமயம் வரும் போது காட்டுவான். நான் ஓதிய இரண்டாவது வசனத்தில் இறைவன் இக்கருத்தைக் கூறியுள்ளான்.

ஆனால், ஈமான் கொண்டவர்களின் ஈமானில் உறுதியை ஏற்படுத்துவதற்காக, ஆணவம் கொண்டவர்கள் மற்றும் சத்தியத்தின் எதிரிகளின் சூழ்ச்சியையும், தீய முயற்சிகளையும் தோல்வியடையச் செய்வதற்கான சின்னச்சின்ன சம்பவங்களை இறைவன் காட்டி வருகிறான்.

கடந்த சில நாட்களுக்கு முன் இந்தோனேஷியாவில் பெயர் தாங்கிய ஆலிம்களும், அவர்களின் சீடர்களும் நிகழ்த்திய கோர சம்பவத்திற்குப் பிறகு முல்லாக்களுக்கு இன்னும் தைரியம் பிறந்து விட்டது. இந்த சம்பவத்தைப் பார்த்த பிற பகுதிகளைச் சேர்ந்த மவ்லவிகள் நாங்கள் இப்பணியில் பின்தங்கி விட்டோமே! என்று கூறி மார்ச் 1 ஆம் தேதி பெரிய ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, இதில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்வர் என்று அறிவித்து இறை வெற்றிகரமாக நடத்த ஆயத்தமானார்கள். இந்த ஊர்வலத்தில் சில வேண்டுகோள்களையும் முன்வைக்கப் போவதாக அறிவித்திருந்தனர். அதில் அஹ்மதிகளை முழுமையாக

தடைசெய்ய வேண்டும். இவர்கள் தம்மை முஸ்லிம் என்று கூறுவதை விட்டுவிட வேண்டும். இவர்கள் தம்மை முஸ்லிம்கள் என்று அழைக்க வேண்டுமானால் நம்மோடு இணைய வேண்டும். இந்த வேண்டுகோள்களை முழுமையாக நிறைவேற்றாத வரை இந்த போராட்டத்தை தொடர்வதாகவும், குடியரசுத் தலைவரின் பதவியையே பறித்து விடுவதாகவும் அறிவித்திருந்தனர். இதற்காக மிகப்பெரிய அளவில் திட்டங்களைத் தீட்டி இருந்தனர். இந்தோனேஷியா ஜமாஅத் இதை முன்னிட்டு மிகவும் கவலையில் இருந்தது. எதிரிகளின் இந்தப் போராட்டமும் ஆர்ப்பாட்டமும் மிகவும் பலமாக இருக்கப் போகிறது என்று எண்ணினர். ஆனால் இறைவன் இதற்கு எதிராக தன்னுடைய ஏற்பாட்டை செய்து விட்டான். அந்த போராட்டம் மிகவும் சொர்ப்பமான கூட்டம் கொண்டதாகவும், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே அது முடிந்தும் விட்டது. இவர்களது இந்தப் பேராட்டத் திட்டத்திற்கு கொஞ்ச நாள் முன்னதாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மவ்லவிகளின் உள்ளத்தில் இறைவன் ஒரு சிந்தனையை உருவாக்கினான். அதன் விளைவாக மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்று முடிவெடுத்து மிகப்பெரிய மாநாடு நடைபெற்றது. அதில் குடியரசத் தலைவரும் சென்று கலந்து கொண்டார். இவ்வாறு இறைவன் எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்க வழிவகுத்தான்.

எவ்வாறிருப்பினும் நமக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மவ்லவிகளாலோ அல்லது எதிரி மவ்லவிகளாலோ எதுவும் ஆகிவிடப் போவதில்லை. எனினும் இறைவன் சில நேரங்கள் செய்யும் ஏற்பாட்டினால் மவ்லவிகள் தமக்குள்ளேயே கருத்து வேறுபாடு கொள்கின்றனர். எனவே முன்னதாகேவ மாநாடு நடந்ததால் இறைவன் வன்முறை மிகுந்த ஊர்வலத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் தோல்வியுறச் செய்வதற்கான வழியை வகுத்து விட்டான். அரசுத் துறைகளைச் சேர்ந்த ஒரு சில அமைச்சர்களைத் தவிர மற்றவர்களின் போக்கும், செயல்பாடும் ஜமாஅத்திற்கு ஆதரவாக இருந்து வருகிறது. இதற்காக நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்கு இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். லாஹூரில் நிகழ்ந்த ஷஹாதத்திற்குப் பிறகு இறைவன் ஆஃப்பிரிக்காவின் சில இடங்களில் இறைவன் ஜமாஅத்தினரிடத்தில் தூய்மையையும், விசுவாசத்தையும் உயர்த்தியதற்கான காட்சிகளை காட்டினான். அதன் விளைவாக அங்கு பைஅத்துகளும் நடந்தன. அதேபோன்று இந்தோனேஷியாவில் நிகழ்ந்த இந்த சம்பவமும் ஜமாஅத்தின் வளர்ச்சிக்கான வழியைத் திறந்துவிட்டிருக்கிறது. தூய உள்ளம் கொண்ட மக்களுக்கு சத்தியத்தை உணர்ந்து கொள்வதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது.

ஆஃப்பிரிக்காவின் ஒரு நாட்டிலிருந்து முரப்பி சாஹிப் எனக்கு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் கூறுகிறார்:

நான் இணையதளத்தில் இந்தோனேஷியாவின் சம்பவத்தைப் பார்த்தேன். நான் மிகவும் நிம்மதியிழந்தவனாக உணர்ச்சியின் மிகுதியால் அதைப் பார்த்து அழுது கொண்டிருந்தேன். அப்போது தற்செயலாக மாலை நேரத்தில் அப்பகுதியின் சில கண்ணியமிக்க நபர்கள் மற்றும் ஆலிம்களுடன் ஒரு தப்லீக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது நான் தொலைக்காட்சியில் மிருகத்தனமாக நிகழ்த்தப்பட்ட அந்த நிகழ்ச்சியின் ரிக்கார்டிங்கைப் போட்டுக் காட்டி, முதலில் நீங்கள் இதைப் பாருங்கள். அதன் பிறகு நாம் பேச்சை ஆரம்பிக்கலாம் என்று வந்திருந்தவர்களிடம் கூறினேன். அஹ்மதிகளுடன் இவ்வாறு அநியாயம் செய்யப்படுகிறது என்று அச்சம்வத்தின் விளக்கத்தையும் கூறினேன். அந்த நிகழ்ச்சி ஒரு நிமிடம் தான் டி.வி. –யில் ஓடியிருக்கும். உடனே அங்கு அமர்ந்திருந்த ஒரு மாலிம் (அதாவது அங்குள்ள மக்கள் மாலிம் என்பதற்கு இமாம் என்று அழைப்பார்கள்) எழுந்து தனது தலையில் அடித்தவாறு ஏங்கி அழ ஆரம்பித்தார். இவ்வாறு அநியாயமும் அக்கிரமும் செய்பவர்கள் முஸ்லிம்களா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரால் இவ்வளவு கேவலமாக நடந்து கொள்கின்ற மக்கள் இவர்களா? என்று கூறி இந்த மக்களின் இப்படிப்பட்ட இஸ்லாத்தை விட்டு நான் தவ்பா செய்கிறேன். நான் இன்று முதல் அஹ்மதியாகி விட்டேன். உடனே எனது பைஅத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

மார்க்க பிரச்சாரம் மற்றும் தப்லீக் நடக்க வேண்டியதிருந்தது. ஆனால் அதற்கு முன்பாகவே அறிவற்றவர்களின் இழிவான செயலைக் கண்டு இறைவன் அந்த இமாமுக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்கி விட்டான்.

அதன் பிறகு அவர், இந்த மூன்று ஷஹீதுகளுக்குப் பதிலாக இன்ஷா அல்லாஹ் மூன்று ஊர்களை அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் பால் கொண்டு வருவதற்காக வாக்குறுதியளிக்கிறேன் என்றும் கூறினார். அல்லாஹ் அவருக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஆக, எதிரி மறைந்திருந்தும், வஞ்சகமான முறையாலும் சூழ்ச்சிகள் செய்தாலும் அல்லது வெளிப்படையாக எதிர்த்தாலும், நபியை ஏற்றுக் கொள்ளும் இவர்கள் அஞ்சி இந்த நம்பிக்கையை விட்டு பின்வாங்கி விடுவர் என்று நினைக்கலாம். ஆனால் உறுதியான ஈமான் கொண்டவர்கள் அஞ்சுவது ஒருபக்கம் இருக்கட்டும். எதிரிகளின் சூழ்ச்சிகள் யாவும் தூய உள்ளம் கொண்டவர்களின் நெஞ்சங்களை உடனடியாகத் திறந்து அஹ்மதிய்யத்திற்கு ஆதரவாக திருப்பி விடுகிறது. நமது முபல்லிக்குகள் ஓர் ஆண்டில் செய்ய முடியாத இந்தப் பணியை எதிரிகளின் சூழ்ச்சிகள் நமக்கு ஆதரவாக ஒரு நொடியில் செய்து விடுகின்றன. இறைவனது பணியை யாரால் தடுக்க முடியும்? ஆனால் ஆணவம் கொள்கின்ற இவர்களுக்கு இரு ஒருபோதும் புரியாது.

இறைவனின் நடைமுறையில் எந்த மாற்றத்தையும் இறைவன் செய்வதில்லை என்று இறைவன் கூறுகிறான். இறைவனின் வல்லமைதான் வெற்றி பெறும் என்பது அவனது நடைமுறையாகும். இரண்டாவது நடைமுறை அநியாயம் செய்பவர்களை அழிக்கின்ற நடைமுறையாகும். எனவே இது இறைவன் புறமிருந்து ஒரு எச்சரிக்கையாகும். முந்தைய காலத்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் தமது தீய முடிவை அடைந்தனர். எனவே, இன்றும் அதே இறைவன் தான் இருக்கிறான். அதே சக்திகளைக் கொண்ட இறைவனின் வாக்குறுதிகள் இவையாகும்.

**அவர்கள் பூமியில் பயணம் செய்து, அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறு தீயதாக ஆயிற்று என்பதை அவர்கள் பார்த்ததில்லையா?** என்று இறைவன் கூறுகிறான்.

முந்தைய சமுதாயங்கள் அழிந்ததற்கான வரலாறு உங்களுக்கு என்ன பாடம் புகட்டுகிறது? என்பதை ஏன் பார்ப்பதில்லை? இன்றைய நாட்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், பத்திரிகைகளிலும் வீட்டில் உட்கார்ந்த வண்ணம் பழைய சமுதாயங்களின் அழிவிற்குரிய சமாதிகளைப் பார்க்க முடிகிறது. எத்தனை சமுதாயங்கள் பல்வேறு சீற்றங்களால் புதைக்கப்பட்டு விட்டன. முழு ஊர்களும் பூமிக்கு அடியில் புதைந்து விட்டன. இப்போதும் கூட நிலநடுக்கங்கள் ஏற்படும் போது பல ஊர்கள் பூமிக்கடியில் புதைந்து விடுவதை நாம் பார்க்கிறோம். பாடம் பெறும் மக்களுக்கு இதுவும் சிறந்த படிப்பினையாகும். திருக்குர்ஆனில் அந்த சமுதாயங்களின் அழிவைக் குறிப்பிட்டு முஸ்லிம்களுக்கு முதலில் அறிவோடு செயல்பட வேண்டும் என்று வழிகாட்டுகிறான். விழிப்புடன் இருங்கள். முந்தைய சமுதாயங்கள் செய்த அதே அழிவிற்குரிய செயல்களை செய்யாதீர்கள் என்று கூறி முஸ்லிம்களுக்கு அச்சமூட்டுகிறான்.

ஆனால், இந்த எச்சரிக்கைக்குப் பின்னரும் முஸ்லிம்கள் அதை மறந்து விட்டனர். ஆணவம் கொள்பவர்கள், தமது சூழ்ச்சிகளின் மீது நம்பிக்கை வைப்பவர்கள், தமது சக்திகளையும் திறமைகளையும் வைத்து பெருமை கொள்பவர்கள் ஆகியவர்களுக்கு இறைவன் உங்களது இந்த ஆணவம் ஒருபோதும் உங்களுக்கு உதவாது என்று கூறுகிறான்.

அவர்கள் இவர்களை விடவும் பன் மடங்கு சக்தி கொண்டவர்களாக இருந்தனர். அதாவது ஒன்று அவர்கள் இன்றைய அரசுகளை விட மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக விளங்கினர். இரண்டாவது அவர்கள் நபிக்கு எதிராக மிகவும் வலிமையுடையவர்களாக இருந்தனர். உலக வசதிகளில் நபிக்கு எந்த வலிமையும் இல்லை. ஆனால் இறைவனின் தடி ஓங்கிய போது, இறைவன் ஒரு சமுதாயத்தை அழித்துவிட தீர்மானித்த போது எல்லாரும் அழிந்து விட்டனர். இறைவன் தனது இந்த நடைமுறையை திருக்குர்ஆனின் மூலம்

பாதுகாத்து விட்டான். இவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் தோன்றுகின்ற ஃபிர்அவ்ன் மற்றும் அவனது கூட்டத்தினருக்கு இறைவன் பாடம் புகட்டுகின்றான். ஒன்று இறைவனின் வல்லமைக்கு எதிரில் உங்களது சக்திகளுக்கு எந்த தகுதியும் கிடையாது. இரண்டாவது இறைவனைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் பலவீனமாக இருந்த போதிலும் இறை உதவி அவர்களை பலசாலிகளாக ஆக்கி விடுகிறது. ஏனென்றால் இறைவனின் வல்லமை அவர்களுக்குப் பின்னால் இருக்கிறது. வலிமைமிக்கவர்கள் ஒரு காலம் வரும் போது பழங்கதைகளாக மாறி விடுகின்றனர். அவர்கள் அழிந்து விடுகின்றனர். எங்கு இருந்தார்கள்? இப்போது எங்கு பெற்றார்கள்? என்று யாருக்கும் தெரியாமல் மறைந்து விடுகின்றனர். எனவே இறைவனைச் சார்ந்தவர்களை எதிர்க்கின்ற எதிரிகள் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை எதிர்ப்பது என்பது இறைவனை எதிர்ப்பதற்கு சமமாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**வானங்களிலோ பூமியிலோ இறைவனை செயலிழக்கச் செய்பவர் யாரும் இல்லை** என்று இறைவன் கூறுகிறான்.

ஒரு சில முட்டாள் சமுதாயங்கள் அல்லது சில நாடுகளின் சில மக்கள் தாம் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் ஆவர் என்று கருதுகின்றனர். நாம் இந்தக் குறைந்த எண்ணிக்கையில் வாழும் மக்களை அல்லது குறைந்த மதிப்பிலான மக்களை நமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடலாம் என்று கருதுகின்றனர். உலக கண்ணோட்டத்தில் பார்ப்பதாக இருந்தால் இந்த சிந்தனை முட்டாள்தனமான ஒன்றல்ல. மாறாக, இது மிகவும் சரியான சிந்தனைதான். ஏனென்றால் பலசாலியாகவும் சூழ்ச்சிகரமாகவும் செயல்படுபவர்கள் வெற்றி பெறுவதுண்டு. உலகத்தின் இன்றைய காலகட்டத்திலும் நாம் பார்க்கிறோம். சக்திவாய்ந்தவர்களும் சூழ்ச்சிகள் செய்பவர்களுமே உலகத்தை ஆண்டு வருகின்றனர். ஈமான் கொண்டவர்கள் வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்களின் பிடியில் உள்ளனர்.

ஆனால் இங்கு எதிர்ப்பு என்பது உலகவாதிக்கு, உலவாதிகளோடு அல்ல. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் தொல்லைகள் கொடுக்கப்படுகிறது. எனவே இங்கு எதிர்ப்பு உலகவாதிகளுக்கும் இறைவனைச் சேர்ந்தவர்களுக்கும் மத்தியில் நிலவுகிறது. இறைவனால் நிறுவப்பட்ட ஜமாஅத்திற்கு எதிர்ப்பு ஏற்படுகிறது. எனவே இங்கு பொதுவான உலக நடைமுறையும், சட்டமும் செல்லுபடியாகாது. மாறாக, இதில் இறைவனின் உதவி கிடைக்கப் பெற்றவரே வெற்றி அடைவார். இறைவன் அவர்களின் சார்பாக நின்று, இறைவனை யாராலும் செயலிழக்கச் செய்ய முடியாது என்று அறிவிப்பான்.

எனவே இன்றைய காலகட்டத்தில் நமக்கு கிடைத்துள்ள நற்செய்தி இதுவாகும். இது நற்செய்தியை வழங்குவதுடன் நமக்கு ஒரு பொறுப்பின் பக்கமும் கவனமூட்டுகிறது. இறைவனைச் சார்ந்திருக்கும் மக்களுடன் இணைந்து இறைவனுடன் உண்மையான தொடர்பை உருவாக்க வேண்டும். அல்லாஹ்வின் நடைமுறை தனது சிறப்பான அடையாளத்தை வெளிப்படுத்துகின்ற மக்களுடன் சேர்ந்திருக்க வேண்டும். உங்களது துஆக்கள், வணக்கங்கள், செயல்கள் ஆகியவற்றை இறைவனும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் அடையாளமிட்டுக் காட்டியுள்ள வழியில் இருக்க வேண்டும். இதை மிகவும் தெளிவான முறையில் இக்காலத்தின் இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு விளக்கித் தந்துள்ளார்கள். நாம் இந்தக் கோட்பாட்டை உறுதியாக பற்றிக் கொண்டால் பின்னர் பாகிஸ்தானின் சக்திவாய்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது இந்தோனேஷியா அல்லது பங்களாதேஷ் அல்லது வேறு ஏதாவது அரபு நாடாக இருந்தாலும் இவை அனைத்தும் உறுதி வாய்ந்த வல்லமைமிக்க இறைவனின் முன்னால் ஒரு பொருட்டே அல்ல. இறைவனைச் சார்ந்திருப்பவர்களே வெற்றிக்குரியவர்கள் ஆவர் என்று இறைவன் எழுதி வைத்து விட்டான். இறைவனின் உதவி, யாருக்கு இருக்கிறதோ அவரே வெற்றி பெறுவார்.

எனவே எதிரிகள் இறைவனின் வல்லமையை சுட்டிக் காட்டுவதை புரிந்து கொள்ள வேண்டும். தம்மை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் வல்லமை இறுதியில் வெற்றி பெறுவது

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். அச்சமயத்தில் எந்த சாக்குப்போக்கும் செல்லாது. பிறகு இறைவனின் தீர்ப்பு வெளியாகும் போது எல்லாம் அழிந்து விடும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை நான் வாசிக்கிறேன். ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

இறைவன் ஆணவம் கொண்ட இந்த மல்லவிகளின் ஆணவத்தை அழிப்பான். இறைவன் ஏழைகளுக்கும், பலவீனமானவர்களுக்கும் எப்படி உதவுகிறான் என்பதை அவர்களுக்கே காட்டுவான். அவன் தீயவர்களை கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் எரிவான். தீயவன் தன்னுடைய சூழ்ச்சிகளையும் திட்டங்களையும் வைத்து வெற்றி பெற்று விடுவேன் என்றும், சத்தியத்தை சூழ்ச்சிகளை வைத்து அழித்து விடுவேன் என்றும் கூறும் போது இறைவனின் வல்லமையும் வலிமையும் அவனிடம், தீயவனே, எனக்கு எதிராக சூழ்ச்சிகளும் திட்டங்களும் தீட்ட உனக்கு யார் கற்பித்தது? நீ மிகவும் இழிவான ஒரு துளியாக கற்பப்பையில் இருந்தவன் அல்லவா? என்னுடைய சொல்லுக்கு மாறு செய்ய உன்னால் முடியுமா? என்று கேட்கிறது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனுக்கு விருப்பமானவர்கள் மற்றும் அவனுக்கு விசுவாசம் கொண்ட நல்லடியார்கள் ஆகியவர்களின் சத்தியம் உலகவாதியும் குருடரும் பார்க்க முடியாத அளவிற்கு மிகவும் உயர்ந்து விடுகிறது. எனவே எல்லா மல்லவிகளும் அவர்களை எதிர்க்கத் துணிகிறார்கள். இந்த எதிர்ப்பு மக்களுக்கு எதிராக அல்ல. மாறாக இறைவனுக்கு எதிராக ஆகி விடுகிறது. இறைவன் ஒருவரை மிகவும் உன்னதமான குறிக்கோளுக்காகப் படைத்துள்ளான். அவர் மூலமாக உலகில் மிகப் பெரிய சீர்திருத்தத்தை இறைவன் செய்ய நாடுகிறான். இந்தப் பெருமைக்குரிய மனிதரை ஒரு சில அறிவீனர்கள், கோழைகள், முட்டாள்கள், பலவீனமானவர்கள் எதிர்த்து விட முடியுமா?

ஆற்றில் இரண்டு கப்பல்கள் மோதினால், அதில் ஒரு கப்பலில் மன்னர் இருக்கிறார். அவர் நேர்மையானவர், கண்ணியமிக்கவர், அறிவாளியாவார். அவர் சிறந்த உதவியாளர்களுடன் இருக்கிறார். இன்னொரு கப்பலில் போக்கிரிகளும், தாழ்ந்தவர்களும் உள்ளனர் என்றால் இவ்விரண்டில் ஏதாவது ஒரு கப்பலை மட்டுமே காப்பாற்ற முடியும். இன்னொன்றை அதில் இருக்கும் மக்களுடன் சேர்த்து அழித்தே ஆக வேண்டும் என்ற தருணம் வந்தால் நேர்மையான மன்னரின் கப்பல் அழிக்கப்படுமா அல்லது இழிவடைந்த போக்கிரிகளின் கப்பல் அழிக்கப்படுமா? நான் உங்களுக்கு உண்மையாகக் கூறுகிறேன். இந்தத் தருணத்தில் மன்னரின் கப்பல் பல்வேறு உதவிகளுடன் காப்பாற்றப்படும். இழிவடைந்த போக்கிரிகளைக் கொண்ட கப்பல் அழிக்கப்படும். அவர்கள் சற்றும் பொருட்படுத்தப்பட்டால் அனைவரும் அழிக்கப்படுவார்கள். அவர்கள் அழிக்கப்படுவதில் எல்லாருக்கும் மகிழ்ச்சி ஏற்படும். ஏனென்றால் உலகிற்கு நீதியான ஆட்சி புரிகின்ற அரசர் தேவைப்படுகிறார். அவரின் அழிவு ஒரு உலகத்தின் அழிவிற்கே சமமாகும். ஒரு சில போக்கிரிகளும், அயோக்கியர்களும் அழிந்து விட்டால் அவர்களின் அழிவால் உலகிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே இறைவனின் நடைமுறை இதுவாகும். அவனது தூதர்களுக்கு எதிராக ஒரு பிரிவு எழும்போது அவர்கள் தம்மை எவ்வளவுதான் தூயவர்கள் என்று கருதினாலும் அவர்களையும் இறைவன் அழித்து விடுகிறான். அவர்களின் அழிவுக்கான நேரம் வந்து விடுகிறது. ஏனென்றால் இறைவன் எந்த உன்னதமான குறிக்கோளுக்காக தனது தூதர்களை அனுப்புகிறானோ அதை வீணாக்க விரும்புவதில்லை. அவ்வாறு செய்தால் இறைவன் தனது குறிக்கோளுக்கே எதிரியாகி விடுவான். அதன் பிறகு பூமியில் அவனை யார் வணங்குவார்? உலகம் பெரும்பான்மையைப் பார்த்து இந்தக் கூட்டம் மிகப் பெரிய கூட்டமாகும். இதுவே சிறந்தது என்று நினைக்கிறது. ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் மக்கள் பள்ளிவாசலில் கூடுகின்றனர். இவர்களா தீயவர்கள்? என்று அறிவீனர் கருதுகிறார். ஆனால் இறைவன் பெரும்பான்மையைப் பார்ப்பதில்லை. அவன் உள்ளங்களைப் பார்க்கிறான். இறைவனின் சிறப்பிற்குரியவர்களிடம் இறை நேசம், தூய்மை, சத்தியம் மற்றும் விசுவாசத்தின் சிறப்பான ஒரு துளி இருக்கும். என்னால் அதை விவரிக்க முடிந்தால்

விவரிப்பேன். ஆனால் நான் எப்படி இதைக் கூறுவது. உலகம் தோன்றிய நாள் முதல் எந்தத் தூதரும் இந்த இரகசியத்தைக் கூறவில்லை. இறைவனின் நம்பிக்கையைப் பெற்ற அடியார்களின் ரூஹ் இறை சன்னிதானத்தில் விழுகிறது. இந்த நிலையை விவரிக்க நம்மிடம் வார்த்தைகள் இல்லை.

எனவே எதிரிகளின் எந்த முயற்சியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னேற்றத்தை எவ்வகையிலும் பாதிக்கவே இல்லை. ஏனென்றால், அவர்கள் செய்த ஒவ்வொரு சூழ்ச்சியையும் இறைவன் அவர்களிடமே திருப்பி விட்டான். இன்று வரை நாம் இந்தக் காட்சியை பார்த்து வருகிறோம். நாம் நமது ஈமானில் உறுதியாக நிலைத்திருக்கும் வரை ஜமாஅத்தின் வளர்ச்சியைப் பார்த்து வருவோம். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**இன்னோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது அழிவை விரும்புகின்றவர்கள் தவறிழைக்கிறார்கள். இது அவர்களின் துரதிஷ்டமாகும். இறைவன் தன்னுடைய கைகளால் நாட்டிய மரம் நான் ஆவேன். என்னை வெட்ட நினைப்பவர்கள் காரூன், யூதாஸ் மற்றும் அபூஜஹில் ஆகியவர்கள் அடைந்த முடிவையே அடைவார்கள்.

மக்களே! இறுதி வரைக்கும் என்னுடன் விசுவாசத்துடன் இருக்கும் கரம் என்னோடு உள்ளது என்பதை நம்புங்கள். உங்களது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள், சிறியவர், பெரியவர் ஆகிய அனைவரும் ஒன்றுசேர்ந்து என்னுடைய அழிவிற்காக துஆ செய்தாலும், ஸஜ்தா செய்து உங்களது மூக்கு தேய்ந்தாலும் கைகள் காய்ப்பு அடைந்தாலும் உங்களது துஆவை இறைவன் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டான். இறைவன் தனது பணியை நிறைவேற்றாத வரை ஓயமாட்டான். மனிதர்களில் ஒருவர் கூட எனக்கு துணை நிற்கா விட்டாலும் இறைவனின் வானவர்கள் என்னுடன் இருப்பார்கள். நீங்கள் எனக்காக சாட்சியங்களை மறைத்தால் கற்கள் கூட எனக்காக சாட்சி கூறும். எனவே நீங்கள் உங்கள் உயிர்களுக்கு எதிராக அநியாயம் இழைக்காதீர்கள். பொய்யர்களின் முகம் வேறு, சத்தியவான்களின் முகம் வேறாகும். இறைவன் எதையும் தீர்மானிக்காமல் விட்டு விடுவதில்லை. பொய் மற்றும் இட்டுக் கட்டுகின்ற வாழ்க்கையை நான் சபிக்கிறேன். படைப்பினங்களுக்கு அஞ்சி இறைவனின் கட்டளைகளை விட்டு விலகும் நிலையையும் நான் சபிக்கிறேன்.

மேலும் கூறுகின்றார்கள்: மக்களே! நன்றாக கேளுங்கள். இது பூமியையும் வானங்களையும் படைத்த அந்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் தன்னுடைய இந்த ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரவச் செய்வான். ஆதாரங்களாலும், வலுவான சான்றுகளாலும் எல்லாரையும் விட இந்த ஜமாஅத்திற்கு வெற்றி வழங்குவான். உலகத்தில் இந்த மார்க்கம் மட்டுமே கண்ணியத்துடன் நினைவு கூறப்படும். அந்த தருணம் மிகவும் சமீபத்தில் உள்ளது. இறைவன் இந்த ஜமாஅத்திற்கு எல்லையில்லா அருட்கொடைகளை வழங்குவான். இதை அழித்துவிட நினைக்கும் ஒவ்வொருவரையும் தோல்வியடையச் செய்வான். இந்த வெற்றி நிரந்தரமாக இருக்கும். கியாமத் வரும் வரை இருக்கும்.

ஆனால் என்னை ஏளனம் செய்பவர்களின் ஏளனத்தால் என்ன இழப்பு ஏற்பட்டு விடப் போகிறது? ஏனென்றால் ஏளனம் செய்யப்படாத எந்த நபியும் இல்லை. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஏளனத்திற்கு ஆளாக வேண்டியது அவசியமாகும்.

இறைவன் கூறுகிறான்: **அடியார்களின் மீது பரிதாபமே! எந்த தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள அவரை ஏளனத்திற்குள்ளாக்கவே செய்கின்றனர். (36:31)**

இது இறைவன் புறமிருந்து வழங்கப்பட்ட ஒரு அடையாளமாகும். எல்லா நபிமார்களும் ஏளனம் செய்யப்படுகின்றனர். ஆனால் எல்லா மக்களின் முன்பும் வானத்திலிருந்து நேரடியாக ஒருவர் இறங்கும் போது அவருடன் வானவர்களும் இருப்பார்கள் என்றால் அவரை யார் ஏளனம் செய்வார்? எனவே இந்த ஆதாரத்தை வைத்து சிந்தித்துப் பார்த்தலும், மஸீஹ் வானத்திலிருந்து இறங்குவார் என்பது வெறும்

பொய்யான கற்பனையாகும் என்பதை ஓர் அறிவாளி புரிந்து கொள்ளலாம். யாரும் வானத்திலிருந்து இறங்கமாட்டார் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இப்போது உயிருடன் உள்ள நமது எல்லா எதிரிகளும் இறந்து விடுவார்கள். இவர்களில் யாரும் ஈசப்னு மர்யம் வானத்திலிருந்து இறங்குவதைப் பார்க்கமாட்டார். பிறகு மீதியிருக்கும் இவர்களது சந்ததிகளும் மரணிப்பார். இவர்களிலும் யாரும் ஈசப்னு மர்யம் வானத்திலிருந்து இறங்குவதைக் காணமாட்டார். அதன் பின் அவர்களின் சந்ததிகளின் சந்ததிகளும் மரணம் அடைவர். அவர்களும் மர்யமின் மகன் மஸீஹ் வானத்திலிருந்து இறங்குவதைக் காணமாட்டார்கள். அப்போது இறைவன் அவர்களின் உள்ளத்தில் பதற்றத்தை ஏற்படுத்துவான். சிலுவை வெற்றியின் காலகட்டமும் கடந்து விட்டது. இப்போது உலகம் வேறு பாதையில் வந்து விட்டது. ஆனால் மர்யமின் மகன் ஈசா இன்னும் வானத்திலிருந்து இறங்கவில்லையே என்று மக்கள் கருதுவர். அறிவுள்ளவர்கள் திடீரென்று இந்தக் கொள்கையை விட்டு விழிப்புணர்வு கொள்வர். இன்றைய தினத்திலிருந்து மூன்றாவது நூற்றாண்டு முடிவதற்குள் ஈசாவிற்காக காத்திருந்தவர்கள் முஸ்லிம்களும் கிறித்தவர்களும் இந்த கொள்கையிலிருந்து சலிப்படைந்து இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவர். அப்போது உலகில் ஒரே மார்க்கமும் ஒரே வழிகாட்டியும் தான் இருப்பர்.

நான் விதை விதைப்பதற்காகவே வந்துள்ளேன். என்னுடைய கைகளால் இந்த விதை விதைக்கப்பட்டுள்ளது. இனி அது வளரும்; மலரும். அதைத் தடுப்பவர் யாரும் இல்லை.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்தக் கூற்றின் உண்மைத்தன்மையை நாம் பார்த்து வருகிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறைவனின் உதவிகள் இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். இன்று இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப ஆசிய நாடுகளிலும், தீவு நாடுகளிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஆஃப்பிரிக்காவின் பசுமையான நாடுகளிலும், தூரத்தில் அமைந்துள்ள பாலைவனப் பகுதிகளிலும் அஹ்மதிய்யத்தை இறைவன் பரப்பி விட்டான். பரப்பியது மட்டுமின்றி மிகவும் மகத்துவமான முறையில் இது வளர்ந்தும் வருகிறது. ஒவ்வொரு அஹ்மதிய்யத்தின் தியாகமும் நமக்கு புதிய குறிக்கோளையும், இலக்கையும் அடைவதற்கு காரணமாக அமைகிறது. எனவே இறைவனின் இந்த அருட்கொடைகளிலிருந்து பங்கு பெறுவதற்கும் ஈமானில் உறுதியைப் பெறுவதற்கும் முன்பை விட அதிகமாக நாம் துஆ செய்வது அவசியமாகும். உலகத்தின் நிலைகள் மிகவும் விரைவாக மாறி விடுகின்றன. இன்ஷா அல்லாஹ். இவை அஹ்மதிய்யத்திற்கு ஆதரவாக மகத்துவம் மிக்க காட்சிகளை காட்டுவதற்கு வழிகாட்டிகளாக அமையும். இதற்காக அதிகமாக துஆ செய்வது அவசியமாகும். நாம் நமது நிலைகளைக் கண்காணிப்பது அவசியமாகும். குறிப்பாக, துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். அதிக கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நமது குறைகளை மறைப்பானாக. நாம் செய்யும் எந்தவொரு செயலும் நமது வளர்ச்சியை காண்பதிலிருந்து நம்மை தடுத்து விடாமல் இருக்கட்டுமாக!

இறுதியில் கவலைக்குரிய ஓர் அறிவிப்பு உள்ளது. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இவருடைய ஜனாஸா தொழுகையை நடத்துவேன். மதிப்பிற்குரிய காரி மர்ஸுக்கி சாஹிப். இந்த இமாம் சாஹிப் மொரோக்கோவைச் சார்ந்தவர் ஆவார். இவர் 75வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் 2002 -ல் பைஅத் செய்து ஜமாஅத்தில் சேர்ந்தார். இவர் நல்ல படித்தவர் ஆவார். நானும் இவரை சந்தித்திருக்கிறேன்.

**இங்குள்ள அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:**

தப்லீகிற்கான நமது குழு இவரிடம் சென்று இவருக்கு தப்லீக் செய்து வந்தது. தப்லீகிற்கான பெரிய கூட்டங்கள் இவருடைய பகுதியில் நடந்து வந்தது. இவர் இமாமாக இருந்தார். தப்லீகின் போது ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி தட்டிக் கழித்து விடுவார். ஆலிம்களுக்கென்று ஒரு பிடிவாதம் உண்டு. அது இவரிடமும் இருந்தது. ஒருமுறை தப்லீக் அமர்வு நடந்து கொண்டிருந்தது. அப்போது தப்லீக் செயலர், இவர்களிடம் பேசுவது

கல்லில் மண்டையை முட்டுவதற்கு சமமாகும். இவர்களை விட்டு விடுங்கள் என்று கூறினார். அப்போது நான் அங்கிருந்து எழும் போது ஈஜாஸுல் மஸீஹ் என்று நூலைக் கொடுத்தேன். அதைப் படித்து விட்டு சில நாட்கள் கழித்து வந்து என்னுடைய பைஅத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். இவ்வாறு இவர் இறைவனின் அருளால் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். இவர் தமது குடும்பத்தில் ஒரே அஹ்மதியாவார். இவர் பைஅத் செய்வதற்கு முன் ஃபிரான்ஸில் ஸ்ட்ராஸ்பெர்க்கின் அஇம்மா கமிட்டியின் நிரந்தர உறுப்பினராக இருந்தார். பள்ளிவாசலில் இவர் குத்பாவும் கொடுத்து வந்தார். எல்லா இமாம்களும் இவரது திறமை மற்றும் அறிவுத்திறனைப் பாராட்டி வந்தனர். ஆனால் மக்கள் இவர் அஹ்மதியாகி விட்டார் என்று அறிந்ததும் அனைவரும் இவரை எதிர்க்க ஆரம்பித்தனர். இதனால் இவராகவே முன் வந்து இமாமத் பதவியை விட்டு விட்டார்.

2003 -ல் ஃபிரான்ஸ் மாநாட்டின் போது இவரை நான் முதலாவதாக சந்தித்தேன். கடந்த வருடம் நான் ஃபிரான்ஸிற்குச் சென்றிருந்த போது அவர் மிகவும் பலவீனமாக இருந்தார். சொல்ல முடியாத அளவிற்கு இவருடைய நோய் மிகவும் அதிகமாக இருந்தது. ஸ்ட்ராஸ்பெர்கிற்கு நான் சென்றிருந்த போது இவர் அங்கு வந்தார். அப்போது அவர் அமீர் சாஹிபிடம் கலீஃபத்துல் மஸீஹை சந்திப்பதற்காக இலண்டனுக்கு வாருங்கள் என்று நீங்கள் ஒவ்வொரு முறையும் என்னை அழைத்திருந்தீர்கள். ஆனால் மருத்துவர் எனக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கவில்லை. நான் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது இறைவன் எவ்வாறு ஏற்பாடு செய்து விட்டான் என்று பாருங்கள். கலீஃபத்துல் மஸீஹே என்னைப் பார்ப்பதற்காக என்னிடம் வந்து விட்டார்கள் என்று கூறினார். கிலாஃபத்தோடு அவருக்கு ஒப்பற்ற நேசம் இருந்தது. இவர் திருக்குர்ஆனை கையால் எழுதி வந்தார். நான் ஸ்ட்ராஸ்பெர்க் சென்றிருந்த போதும் அதை எழுதி முடித்த பின் உங்களுக்கு அன்பளிப்பாக தர விரும்புகிறேன் என்று என்னிடம் கூறினார்.

இவர் மரணித்த போது இவருடைய தலைமாட்டில் திருக்குர்ஆனும் கிலாஃபத் நூற்றாண்டின் சவேனியரும் இருந்தது. செயற்குழுக் கூட்டம் நடத்துவதற்காக இவர் பெரும்பாலும் தமது வீட்டில் இடம் தருவார். ஸ்ட்ராஸ்பெர்க் பள்ளிவாசலுக்காக சந்தா வழங்குமாறு கேட்டுக் கொண்ட போது இவர் தம்மிடம் இருந்த எல்லா பணத்தையும் வழங்கி விட்டார். அல்லாஹ் இவர்களின் பாவங்களை மன்னிப்பானாக! இறைவன் தனது விருப்பத்திற்குரிய சொர்க்கத்தில் உயர்ந்த இடத்தை வழங்குவானாக! இவர்களின் பிள்ளைகளும் நெருங்கிய உறவினர்களும் அஹ்மதிகள் இல்லை. இறைவன் அவர்களின் உள்ளங்களையும் திறப்பானாக! இவர்களும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 04.03.2011**

Translated by : **Maulvi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**